**தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

லங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை**

அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2021/03 ஆம் இலக்க வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அந்த விதிகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட வேண்டிய SA-10, SA-50, SA-71, SA-81 மற்றும் SA-90 ஆகிய படிவங்கள் அரச கணக்கு வழிகாட்டல்களின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கு கூற்றுக்களை உள்ளடக்குவது தவிர்க்கப்பட்டுள்ளதென்றும், அடுத்த ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் உள்ள அந்த குறைபாடுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச கணக்கு வழிகாட்டல்களின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் மீதிகளுடன் இணங்குவது உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் வருமானத்திற்கு இடையே ரூபா 113,170,000 வேறுபாடும் செலவின மீதிக்கு இடையே ரூபா 113,170,000 வேறுபாடும் காணப்பட்டது. | திணைக்களம் சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டத்தை பயன்படுத்தி தினசரி நிதி கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்கிறதுடன் பொது திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு மாதாந்த கணக்கு பொழிப்புக்களை சமர்ப்பிக்கிறது. வருமானத்தை குறைத்துக் காட்டுதல் ஒருபோதும் மேற்கொள்ளப்படவில்லை. | கணக்குகள் சரியாக கொண்டு வரப்பட வேண்டியதுடன் திறைசேரி புத்தகங்களுடன் பரீட்சை மீதி இணக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்கு வழிகாட்டலின் 6வது பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் இரண்டும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அதன் பிரகாரம் | காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகளாக பதிவுசெய்யப்பட்ட ரூபா 97,532,137 தொகை அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கின் வாக்குப்பணம் 258 மற்றும் ஏனைய | அரச கணக்கு வழிகாட்டல்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் முற்பணங்களின் பெறுவனவு ரூபா 126,697,544 ஆக உள்ள போதிலும் அது ரூபா 13,041,674 ஆல் குறைத்து ரூபா 113,655,870 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் முற்பணங்களின் கொடுப்பனவு ரூபா 110,573,811 ஆக உள்ள போதிலும் அது ரூபா 13,041,674 ஆல் குறைத்து ரூபா 97,532,137 ஆக காட்டப்பட்டுள்ளது. | வாக்குப்பணங்களுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக மேற்கொள்ளப்பட்ட காசுக் கொடுப்பனவுகளாக உள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கின் வாக்குப்பணம் 258 மற்றும் ஏனைய வாக்குப்பணங்களிலிற்கு உண்மையாக பெறப்பட்ட கூட்டுமொத்த தொகையான ரூபா 113,655,870 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு முற்பண அறவீடுகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. | |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ஏனைய அமைச்சுக்களால் (மூலதனச் சொத்துக்கள், புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் மற்றும் திறன் மேம்பாடு என்பவற்றை தவிர்த்து) ஏனைய மூலதனச் செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,680,409,158 செலவினங்கள் காட்டப்பட வேண்டிய போதிலும் அது ஏனைய வாக்குப்பணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட படிவத்தில் ''ஏனைய வாக்குப்பணங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவினம்'' என்ற தனி உருப்படி இருப்பதால், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ், வாக்குப்பணம் 258 இன் மூலதனச் செலவினத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட முதலீட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் குறிப்பிடப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்படுகிறது. | இவை முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

மாவட்ட செயலகம் தொடர்பான வருமானமல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்வதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நெல் கொள்வனவு செய்வதற்கு திறைசேரியால் வழங்கப்பட்ட கடன் முற்பணமாக (இலக்கம் - 7000) உள்ளதால் அதிலிருந்து அறவிடப்படும் ரூபா 300,000 தவணைப்பணத் தொகை முற்பண பெறுவனவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அது வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் தனியாகப் பதிவு செய்யப்பட்டது. அதேபோல் பெற வேண்டிய முற்பணத் தொகை நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டவாறு எதிர்வரும் வருடத்திற்கான கணக்குகளை தயாரிப்பதில் நிதி செயலாற்றல் கூற்றில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இந்தத் தொகை முற்பண செலவின விடயத்தின் கீழ் பெறப்பட்டதால் வழங்கப்பட்ட கடன் தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்கு அறவிடப்பட்ட தவணைப்பணம் முற்பணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும், |

#### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச கணக்கு வழிகாட்டல்களின் பிரகாரம் திறைசேரி அசீட்டுத்தாளின் மீதிகளை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் குறுக்கு பதிவுகள் மூலம் முற்பண பெறுவனவுகள் மற்றும் முற்பண கொடுப்பனவுகளின் கணக்கிணக்கத்தின் பின்னர் மீதி குறிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 747,966 பெறுவனவுகளும் ரூபா 11,110,304 கொடுப்பனவுகளும் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இறுதிக் கணக்குத் தயாரிப்புப் பயிற்சியில், திணைக்களக் கணக்குப் பிரிவின் சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டம் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சை மீதியின் அடிப்படையில் இதனை செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் பதிவு செய்யப்பட்டதென சுட்டிக்காட்டப்படுகிறது. | வழிகாட்டல்களின் பிரகாரம் திறைசேரி மீதிகளின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டுத் தகவல்களை சமர்ப்பிக்கும் போது முன்னைய ஆண்டில் முற்பணங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 2,765,912 மற்றும் ரூபா 12,619,345 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | முற்பணங்களின் பெறுவனவுகள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவுகள் முறையே ரூபா 72,305,129 மற்றும் ரூபா 67,695,209 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள 2020 நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரதியொன்று கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்னிணைப்பு 03 ஆக அனுப்பப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது ஒப்பீட்டுத் தகவலில் சரியான பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ஏனைய இடங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்ற மற்றும் ஏனைய இடங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 34,283,496 மற்றும் ரூபா 53,270,928 ஆக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்றில் ஒப்பீட்டுத் தகவல்களை வழங்கும் போது அப் பெறுமதிகள் முறையே ரூபா 46,770,074 மற்றும் ரூபா 55,906,988 ஆக குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் காரணமாக, முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 12,486,578 மற்றும் ரூபா 2,636,060 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளன. | 2020 ஆம் ஆண்டில் அறிக்கையிடும் நிறுவனத்திலிருந்து இடமாற்றம் செய்யும் போது ஒதுக்கப்பட்ட கடனாக ரூபா 34,140,961 தொகையையும் நிறுவனத்திற்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் சார்பாக பெறப்பட்ட கடனின் பெறுமதியாக ரூபா 45,185,548 தொகையையும் உள்ளடக்குவதற்கு திருத்தப்பட்ட 2020 இறுதி கணக்கிணக்கக் கூற்று கணக்காய்வால் சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்னிணைப்பு 02 ஆக பதில் இல. KDS/2/4/2/1 உடன் இணைக்கப்பட்டது. | முன்னைய ஆண்டு தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களைக் காட்டும் போது சரியான பெறுமதிகள் காட்டப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் சார்பாக ஒதுக்கப்பட்ட கடன் மீதிகளும், ஏனைய நிறுவனங்களில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் சார்பாக ஒதுக்கப்பட்ட கடன் மீதிகளும் முறையே ரூபா 36,439,248 மற்றும் ரூபா 55,643,387 ஆக காணப்படுகின்ற போதிலும் கட்டுநிதி கணக்கிணக்கக் கூற்றில் அப் பெறுமதிகள் முறையே ரூபா 47,549,552 மற்றும் ரூபா 56,391,352 ஆக குறிப்பிடப்பட்டன. இதன் விளைவாக, ஒதுக்கப்பட்ட மற்றும் | திறைசேரியின் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் திணைக்களத்தின் சிகாஸ் கணனி நிகழ்ச்சித்திட்டம் மூலம் உருவாக்கப்பட்ட பரீட்சைமீதியின் அடிப்படையில் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டது. | கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதிகளை சரியாக வழங்க வேண்டும். |

கையேற்கப்பட்ட கடன் மீதிகளுக்கு இடையே முறையே ரூபா 11,110,304 மற்றும் ரூபா 747,965 வேறுபாடு இருந்தது.

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த ஆண்டில் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 6,535,339,049 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் தொடக்கத்தில் மீதி ரூபா 6,611,958,391 ஆக இருந்ததன் காரணமாக நிதியல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டில் ரூபா 76,619,342 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | திறைசேரி குறிப்பு SA 82 அச்சிடப்பட்டு திணைக்களத்தால் 2022.02.11 இல் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காகப் பெறப்பட்டது, மேலும் 2020.12.31 முதல் 2022.02.11 வரை நிதியல்லாத சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் கணக்கீடு போன்ற உண்மைகள் கணக்குகளிற்கு கொண்டு வரும் போது கணக்கிணக்கத்தில் ஆரம்ப மீதிக்கு சேர்க்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதிகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட திறைசேரி குறிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,572,983 தொகையான நிதியல்லாத சொத்துக்களின் 03 விடயங்களின் பெறுமதிக்கு இடையே ரூபா 762,646 வேறுபாடு இருந்ததுடன் கணக்காய்வின் போது திறைசேரி தரவு முறைமையிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 7,810,337 வேறுபாடு இருந்தது. இந்த வேறுபாடு தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | SA 82 திறைசேரி குறிப்பு 2022.02.11 இல் திணைக்கள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக அச்சிடப்பட்டு பெறப்பட்டதுடன் கணக்காய்வு நோக்கங்களுக்காக திறைசேரி குறிப்பு அச்சிடப்பட்டு 2022.03.30 இல் கணக்காய்வு நோக்கங்களுக்காக கணக்காய்வால் பெறப்பட்டது. அதன் பிரகாரம் பெப்ரவரி 11 முதல் மார்ச் 30 வரை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு பதிவுகள் காரணமாக இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) | வாக்குப்பண இல. 2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள், வாக்குப்பணம் 2103 இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பணம் 2104 உபகரணங்களுக்காகவும் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களை கையகப்படுத்துவதற்காகவும் | ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அனைத்து மூலதனச் செலவினங்களும் கையகப்படுத்தல் அல்லது ஆரம்ப மீதிக்கான சேர்த்தல்களாக பதிவு செய்யப்படுகின்றதால் நிதி நிலைமைக் கூற்றானது | நிதிக்கூற்றுக்களில் வேறுபாடுகள் கண்டறியப்பட்டு தேவையான சீராக்கங்கள் சரியாக செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் மீளாய்வாண்டில் ரூபா 113,695,902 ஆக காணப்பட்ட போதிலும் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் அப் பெறுமதி ரூபா 33,928,200 ஆக காணப்பட்டதால் ரூபா 79,767,702 வேறுபாடு காணப்பட்டது. | சொத்துக்கள் சரியாகக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்பதை குறிப்பிடுகின்றது, | |
| (iv) | மாவட்டச் செயலகம் மற்றும் 20 பிரதேச செயலகங்கள் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் சொத்து அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் கூற்றை ஒப்பீடு செய்த போது 03 சொத்து விடயங்கள் தொடர்பாக ரூபா 21,321,307 வேறுபாடு காணப்பட்டது. | SA 82 திறைசேரி குறிப்பு 2022.02.11 இல் அச்சிடப்பட்டதுடன் சொத்து அறிக்கையைத் தயாரிப்பதற்காக அலுவலகங்களால் பல்வேறு திகதிகளில் சொத்து வகை அறிக்கை அச்சிடப்பட்டது. இதன் காரணமாக SA 82 திறைசேரி குறிப்புக்கும் சொத்து அறிக்கைக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் காட்டப்பட வேண்டும். |

### (ஈ) கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஏனைய வளமூலங்களிலிருந்தான பெறுவனவு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 846,675,062 தொகையாக காணப்பட்ட போதிலும் அது கட்டுநிதிக் கணக்கு கூற்றில் ரூபா 959,845,062 ஆகக் காட்டப்பட்டுள்ளதால் ரூபா 113,170,000 வேறுபாடு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் திணைக்களம் ஏனைய வளமூலங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த பெறுவனவுகள் ரூபா 959,845,062 ஆக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | வேறுபாடுகள் பற்றிய சரியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளில் ரூபா 100,000 முதல் ரூபா 3,406,864 வரை அல்லது ஒதுக்கீட்டு தொகையில் 15 சதவீதம் முதல் 100 சதவீதம் | 2021 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டை 2020 ஆம் ஆண்டிலேயே திணைக்களம் தயாரித்த போதிலும் அதன் பின்னர் நாட்டில் நிலவுகின்ற மோசமான நிதி நிலைமையை | பணத்தைப் பயன்படுத்துவதில் சரியான மதிப்பீடுகள் மற்றும் அதிகபட்ச வினைத்திறன் மற்றும் செயற்திறன் அவசியம். |

| | | |
|---|---|---|
| வரையிலான நிதியேற்பாடுகள் முறையான ஆய்வின்றி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக சேமிக்கப்பட்டன. | விவேகமாகப் புரிந்துகொண்டதன் காரணமாக செலவிடப்படாமல் பணம் சேமிக்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அமைச்சினால் 53 கிராம வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 39,600,000 நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படவில்லை. | கிராமப்புற வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் சிக்கலானதாகவும் நடைமுறைக்கு மாறானதாகவும் உள்ளதால் கிராமப்புற வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. | ஒதுக்கப்பட்ட நிதி மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ள முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.3 பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | 2011 பெப்ரவரி முதல் 2020 ஆகஸ்ட் வரையிலான காலப்பகுதியில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்களிடம் இருந்து பெற வேண்டிய கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகத்தர்கள் 10 வருட சேவையை பூர்த்தி செய்திருந்ததால் பிணைகள் தேவைப்படவில்லை. எனவே, பிணைதாரரிடம் இருந்து அறவிட முடியாதுள்ளது. | தாபனவிதிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். |

### 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தில் பூஜாபிட்டிய பிரதேச செயலக பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட 210 செயற்திட்டங்களில் ரூபா 117,144,796 தொகையான பிடிபணம் காணப்பட்டதுடன் நிறுத்திவைத்தல் காலப்பகுதி காலாவதியாகியிருந்தது. செயற்திட்டங்களில் ஏற்கனவே உள்ள குறைபாடுகள் சீர்செய்யப்படாததால் இந்த பிடிபணங்கள் தீர்ப்பனவு செய்யப்படவில்லை. ஒப்பந்ததாரர்கள் அந்த குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கோ அல்லது இந்த பிடிபணங்களை பயன்படுத்தி குறைபாடுகளை சீர்செய்வதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுநிதிகள் கிடைக்காததாலும், காலாவதியான விலைப்பட்டியல்கள் கிடைக்காததாலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களில் உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் ஆற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஹதரலியயெத்த பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தைப் புனரமைப்பதற்காக முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முதியோர் சமூகப் பாதுகாப்பு நிதியத்தால் வழங்கப்பட்ட ரூபா 940,000 தொகை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்ட நிதியில் பாதுகாப்பு வேலி அமைத்தல் மற்றும் குளியலறைகள் புனரமைப்பு தொடர்பான ஆரம்பப் பணிகளுக்காக ரூபா 260,000 தொகை செலவிடப்பட்டதுடன் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்கால வேலைகளை பூர்த்தி செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெறப்படும் ஒதுக்கீடுகள் மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ள முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும், இதனால் அவை குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும். |
| (ஆ) | கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தில் 187 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 127,161,000 ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் எந்தவொரு செயற்திட்டமும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிராமிய வீதிகள் மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் சிக்கலான தன்மை காரணமாக கிராமிய வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவது பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு சிக்கலானதாக இருந்தது. ஆகையால் இச் செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஒதுக்கீடு மீளளிக்கப்பட்டது. | கிராமப்புற வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த விளைவு அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குண்டசாலை பிரதேச செயலகத்தில் கடந்த வருடம் ரூபா 990,000 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட கல்பிஹில்ல விவசாய சந்தைப்படுத்தல் நிலையத்தின் மேல்மாடி மற்றும் கல்பிஹில்ல பிரதேச சேவை பியச என்பன மீளாய்வாண்டின் இறுதிவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,975,000 ஒப்பந்தப் பெறுமதியுடனான ஹரிஸ்பத்துவ பிரதேச செயலக பகுதியிலுள்ள குளகம்மன பிடவெல கால்வாய் அபிவிருத்தி செயற்திட்டம் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 2022 பெப்ரவரி 10 இல் நடாத்தப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது ரூபா 386,991 பணி பெறுமதியிலான 24.3 மீற்றர் நீளம் கொண்ட கால்வாயின் ஒரு பகுதி மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டதுடன் செயற்திட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது அவதானிக்கப்பட்டது. | கொத்மலை சர்வதேச நீர்ப்பாசன பயிற்சி நிலைய உத்தியோகத்தர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், எஞ்சிய பகுதிகள் இடைநிறுத்தப்பட்டு, 2021.12.31 அளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பகுதிகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பான பணிகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதியேற்பாடுகள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளதுடன், அந்த நிதியேற்பாடுகள் கிடைத்தவுடன் மீண்டும் பணிகளைத் தொடங்குவதற்கும், முழுமையான நலன்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாடுகளை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி செயற்திட்டப் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,950,000 பணிப் பெறுமதியுடனான ஹரிஸ்பத்துவ பிரதேச செயலக பிரிவிலுள்ள செனரத்கம சம மாவத்தை கால்வாய் அணைக்கட்டு அபிவிருத்தி செயற்திட்டம் 2022 பெப்ரவரி 10 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகளில் 02 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சினுள் காணப்பட்ட ரூபா 1,236,146 கூட்டுமொத்த பெறுமதியான வேலைத் துண்டுகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டன. | -மேற்படி- | -மேற்படி- |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராம சக்தி ஜனதா இயக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக 09 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் அமைந்துள்ள 23 பிரிவுகளில் ஸ்தாபிக்கப்பட்ட கிராம சக்தி ஜனதா சமித்திக்கு ரூபா 10,400,000 தொகை வழங்கப்பட்டுள்ளது. எனினும் அதில் ரூபா 5,226,613 தொகை 2022 பெப்ரவரி 28 அளவில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டு சங்கத்தின் நம்பிக்கைப்பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.<br>இது வழங்கப்பட்ட பணத்தில் ஏறத்தாழ 50 சதவீதமாகும், மேலும் பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டு சங்கங்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. | சமுதாய பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதில் சிரமம், காணியில் நிர்மாணப் பணிகளுக்கான இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதில் தாமதம், சங்கங்களால் முன்மொழிவுகள் வழங்கப்படுவதில் தாமதம், இந்த வீதிகளில் தண்ணீர் குழாய் பதிக்கும் பணிகள் நீர்வழங்கல் மற்றும் நீர் போக்குவரத்து சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அப்பணிகள் பூர்த்தி செய்யப்படும் வரை கொங்கிறீட் இடுவதில் தாமதம், நிதியெற்பாடுகள் போதாமை, பயனுள்ள செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு போதிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி காணப்படாததால் வாழ்வாதார அபிவிருத்திக்கு சுழற்சி நிதியத்திற்கான நிதியேற்பாடு போதாமை, நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை, மூலப்பொருட்களின் கிரயம் உயர்வு மற்றும் மூலப்பொருட்களின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் இச் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியவில்லை. | விரும்பிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நிதியேற்பாடுகள் மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ள முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 880 ஆகியவற்றின் பிரகாரம், பூஜாபிட்டிய, கலகெதர, சார்லியாயத்த, ஹரிஸ்பத்துவ மற்றும் அக்குரணை ஆகிய பிரதேச செயலகங்களில் பணிபுரியும் பிணை வழங்க வேண்டிய 25 உத்தியோகத்தர்கள் பிணைகளை வைப்புச் செய்திருக்கவில்லை. | உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 04/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுமாறு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பிணைகள் பெறப்பட வேண்டும். |

### 3.6 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தும்பனை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று 2021 ஆகஸ்ட் 27 இல் விபத்துக்குள்ளானதுடன் நிதிப்பிரமாணம் 104(3) இன் கீழ் நட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 2,291,483 ஆகும். கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 25 வரை நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரீட்சிப்பை மேற்கொண்டு நட்டத்திற்கு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை, மேலும் இந் நட்டம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தும்பனை பிரதேச செயலகத்திற்கு சொந்தமான CPPA - 4933 என்ற குழாம் வாகனத்தின் இறுதி விசாரணை நி.பி. 104(4) இன் பிரகாரம் பூர்த்தி செய்யப்படவில்லை. எனவே, நட்டத்தின் பெறுமதி சரியாக குறிப்பிடப்பட்டிருக்காததால், நிதிக்கூற்றுக்களில் நட்டங்களின் கீழ் காட்டப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. | விபத்து இடம்பெற்ற பின்னர் சம்பந்தப்பட்ட பரீட்சிப்புக்களை உடனடியாக மேற்கொண்டு, நட்டத்திற்கு பொறுப்பான நபர்களிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கும், பதிவுகளை வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 04 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 61 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியமாக ரூபா 13,219,853 கூட்டுமொத்த தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், பின்னர் அவர்களிடமிருந்து தவணைப்பணமாக ரூபா 8,034,295 தொகை அறவிடப்பட்டது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 அளவில் மேலும் ரூபா 5,185,558 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | இராணுவ ஊனமுற்றோர் ஓய்வூதியத்திற்கு உரித்துடைய ஓய்வூதியர்களினது ஊனமுற்றோர் ஓய்வூதியம் மற்றும் சேவை ஓய்வூதியம் ஆகியவற்றை இணைத்து கொடுப்பனவு செய்த போது முன்னர் செலுத்தப்பட்ட ஊனமுற்றோர் ஓய்வூதியம் குறைக்கப்பட்டதன் விளைவாக இந்த மேலதிகக் கொடுப்பனவு ஏற்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது. ரூபா 8,034,295 தொகை ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளது, மீதமுள்ள தொகையை அறவீடு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | மேலதிகக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், மேலும் இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஹரிஸ்பத்துவ மாவட்ட செயலகத்திலுள்ள 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் கிராம சக்தி இயக்கத்தின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட கடனில் இருந்து மேலும் ரூபா 3,027,679 மீதி அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் தொடர்ந்து 06 மாதங்களுக்கும் மேலாக செலுத்தப்படாத கடன் மீதி ரூபா 2,442,820 ஆகும். சனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்ட கிராம சக்தி ஜனதா இயக்கத்தின் வழிகாட்டலின் 6 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் இந்தக் கடனை அறவிடுதல் தொடர்பாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 கிராம சக்தி ஜனதா சமித்தி நிறுவப்பட்டு, கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்யப்பட வேண்டும், மேலும் அனைத்து கடன் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய எழுத்துமூலமான பதிவுகளை வைத்திருத்தல் மற்றும் கடன்களை அறவீடு செய்தல் மற்றும் கிராம சக்தி இயக்கத்தின் ஆரம்ப நடவடிக்கைகளில் உதவுதல் மற்றும் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுதல் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை கண்காணித்தல் என்பன உரிய சங்கங்களின் பொறுப்பாகும். மேலும், சங்கங்களின் காலாவதியான கடனை அறவீடு செய்வதற்கான தொடக்கப் புள்ளியொன்றாக, கடனை செலுத்தாத மக்களுக்கு அவர்களது கடனை செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டது. | உரிய கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி மாவட்டத்தில் உள்ள திவிநெகும சமூதாய அடிப்படை வங்கிகள் தொடர்பான வாழ்வாதார சுழற்சி நிதிக் கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மீதி ரூபா 173,690,665 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் மூலம் வழங்கப்பட்ட மொத்த கடன் மீதியில் நிலுவையாக உள்ள மீதி ரூபா 78,754,685 ஆகும். ரூபா 94,935,980 தொகை அல்லது கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 55 சதவீதத்திற்கும் அதிகமானவை செயற்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அவர்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தும் வகையில் வலுவூட்டும் நோக்கத்துடன் வழங்கப்படுகிறது. கடன்களை வழங்குவது | கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக வீழ்ச்சியடைந்த தொழில்முனைவோரால் கடனை திருப்பிச் செலுத்துவதில் பலவீனமான நிலை உள்ளதன் காரணமாக அதிக கடன்களை வழங்குவதில் சிக்கல் காணப்படுகின்றது. ஒரு பயனாளிக்கு சமுதாய அடிப்படை வங்கிகளால் பல வகையான கடன்கள் வழங்கப்பட்டதால், கடன்களை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் கருத்தில்கொள்ளப்பட வேண்டும். சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நடவடிக்கைகளால் அமுல்ப்படுத்தப்படும் மொத்தக் கடன் நிகழ்ச்சித்திட்டமும் வைப்புத் தொகையை மிளப்பெறுவதற்கு வழிவகுப்பதால் பயனாளிகளின் | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்ட மொன்று உருவாக்கப்பட வேண்டும், மேலும் கடன் வழங்கலை அதிகரிப்பதன் மூலம் விரும்பிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சாத்தியமாக இருந்த போதிலும், விரும்பிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாழ்க்கைத் தரம் குறைந்த மட்டத்தில் உள்ளதென சுட்டிக்காட்டப்பட்டது. |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்ட பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் (பகுதி 01) xviii ஆம் பந்தி மற்றும் 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை என்பவற்றில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும், பூஜாபிட்டிய, அக்குரணை, மடதும்பர, ஹரிஸ்பத்துவ, ஹதரலியத்த பிரதேச செயலகங்களில் முறையே 21, 20, 09, 15 மற்றும் 19 உத்தியோகத்தர்கள் 05 தொடக்கம் 22 வருடங்களாக சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது. | கடினமான பணியிடங்களாகக் கருதப்படும் ஹதரலியத்த, ஹசலக்க, உடுதும்பர, மினிப்பே போன்ற அலுவலகங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையின் காரணமாக அவர்கள் கோரிக்கை மேற்கொள்ளாத போது சேவைத் தேவையின் அடிப்படையில் உத்தியோகத்தர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க உத்தியோகத்தர்களுக் கான இடமாற்றக் கொள்கை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திலும் 20 பிரதேச செயலகங்களிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 சிரேஷ்ட நிலை, 39 மூன்றாம் நிலை, 241 இரண்டாம் நிலை மற்றும் 34 ஆரம்ப நிலை பதவிகள் உள்ளடங்கலாக 333 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | பதவி வெற்றிடங்கள் பற்றிய விரிவான அறிக்கைகள் காலாண்டுக்கு ஒருமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன, மேலும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஆட்சேர்ப்புக்களின் பிரகாரம் வெற்றிடங்கள் நிரப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் சேவைகளை முறையாக பேணுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |